பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 26 | செவ்வாய்க்கிழமை | 12.11.2024 | அதிர்வு 102

## நேரடி, மறைமுக தேர்தல் பிரசாரம் முற்றாகத் தடை



“வாக்காளர்கள் நாளைமறுதினம் சுயமாகச் சிந்தித்து வாக்களிப்ப

05▶





# தன்மானத் தமிழர்கள் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும்

## இறுதிப் பிரசாரத்தில் தமிழரசின் வேட்பாளர் சிறீதரன் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள தன்மானத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.

05▶

## ரிஷாத் - மஸ்தான் முரண்பாடு! கலவரமாகிய பிரசாரக் கூட்டம்!!

### அடித்துநொறுக்கப்பட்டன வாகனங்கள்

(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)






சீன தூதுவரும் அதிகாரிகளும் கொண்ட குழு ஒன்று இந்தப் பொதுத் தேர்தல் முடிந்து நான்கு, ஐந்து நாள்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் வருவதாகத் தெரிகின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் உதவிகள் வழங்கும் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதும் அவர்களது நிகழ்ச்சி நிரலில் அடக்கம் எனத் தெரிகிறது.

எனினும், யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இருந்து இன்னும் அத்தகைய நிகழ்வுக்கான சாதகமான பிரதிபலிப்பு ஏதும் கிடைக்கவில்லை என்றும் ஒரு வட்டாரம் தெரிவித்தது.

பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் ஒரு

05▶




# யாழில் தமிழரசின் இறுதிப் பிரசாரம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான இறுதிப் பிரசாரக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின்யாழ்ப்பாணம்தேர்தல்மாவட்டவேட்பாளர்களானஎம்.ஏ.சுமந்திரன், இம்மானுவேல் ஆனோல்ட், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி, சந்திரகாசன் இளங்கோவன், சசிந்திரன் சுரேகா, தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு தமது உரைகளை நிகழ்த்தினர்.













# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இறுதிப் பிரசாரம்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான இறுதிப் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள் கலந்துகொண்டு தமது உரைகளை நிகழ்த்தினர்.














# ரிஷாத் - மஸ்தான் முரண்பாடு! கலவரமாகிய பிரசாரக் கூட்டம்!!

## அடித்துநொறுக்கப்பட்டன வாகனங்கள்

(கி.வசந்தன், ந.லோகதயாளன்)

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பிரசாரக் கூட்டம் இடம்பெற்ற பகுதியில் ஏற்பட்ட குழப்ப நிலையில் இருவர் காயமடைந்தனர். அத்துடன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும், அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் பிரதான வீதிக்கு அருகாக நேற்று திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் காதர் மஸ்தானின் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது அந்தப் பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் பிரசாரக் கூட்டத்தைப் பார்த்துக் கூச்சலிட்டுச் சென்றிருந்தனர்.

சற்றுநேரத்தில் அந்த மோட்டார் சைக்கிள்களுக்குப் பின்னால் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும், அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனத் தொடரணிகள் கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த பகுதிக்கு அருகே உள்ள பிரதான வீதிக்கு வந்தது.

இதனால் இரண்டு தரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டதுடன் சற்றுநேரத்தில் அது கலவரமாகியது.

இந்தக் கலவரத்தில் ரிஷாத் பதியுதீன் பயணித்த வாகனம் அடித்து நொறுக்கப்பட்டது. அவரது ஆதரவாளர்களின் வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்தத் தாக்குதலையடுத்து அந்த வாகனத் தொடரணி அந்தப் பகுதியில் நிறுத்தாமல் வேகமாகச் சென்றது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இழுபறி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

+ + +

இன்று எனது தனிப்பட்ட அனுபவம் ஒன்றைப் பகிர விரும்புகிறேன்.

நாங்கள் மூவர் பாடசாலை கால நண்பர்கள். ஒருவர் இப்போது ஒரு குழுவின் வேட்பாளர். மற்றவர் வாக்காளர். நான் அவர்கள் இருவரின் நண்பன்.

என் நண்பர்கள் இருவரும் அவர்கள் இடையிலான ஒரு பிணக்கைத் தீர்ப்பதற்கு என்னிடம் வந்தார்கள். நாங்கள் 'டேய்.... பிடேய்...!' என்று சண்டை பிடிக்கும் பள்ளிக் காலத் தோழர்கள்.

வேட்பாளர் முதலில் பிரச்சினையை அவிழ்த்தார்.

"டேய்... உவன் செய்ற வேலையைப் பாத்தியோ... உவன் குடும்பத்தில் ஐந்து வோட் உள்ளது. எனக்கு அந்த ஐந்து வோட்டையும் போடுவான் என்று முதலில் சொன்னவன். இப்ப... மனிசிக்குப் பயந்து ஒரு வோட்டும் போட ஏலாது எண்டு சொல்லுறான்... உது நியாயமோ..? ஒருக்கா நீதான் கேள்...!" – என்றார் வேட்பாளர் நண்பர்.

"உவனும் உவன் எடுபிடிகளும் செய்த வேல என்ன தெரியுமோ...? என்ர மனிசி நெருப்பு எடுக்குது... ஒரு வோட்டும் உவனுக்குப் போடக் கூடாது எண்டு ஒற்றைக் காலில் நிக்குது...!"– என்றார் வாக்காளர் நண்பர்.

என்ன விவகாரம் என்று விசாரித்தேன்.

வேட்பாளர் நண்பரின் அணியைச் சேர்ந்தவர்கள் துண்டுப் பிரசுரம் கொடுப்பதற்காக வீடு வீடாகச் சென்றிருக்கின்றார்கள். மற்றைய நண்பரின் வீடு இருந்த பகுதிக்கும் சென்றிருக்கின்றார்கள்.

அவர்கள் சென்ற சமயம் எமது நண்பரும் அவரது குடும்பத்தினரும் வேறு ஒரு கோவில் நிகழ்வுக்காக தொலைவில் உள்ள ஊருக்குச் சென்றிருந்தனர். வீட்டு கேட் பூட்டியிருந்ததால் கேட்டில் துண்டு பிரசுரங்களைச் சொருகியிருக்கிறார்கள் வேட்பாளரின் உதவியாளர்கள். அத்தோடு விட்டிருந்தால் விடயம் முடிந்திருக்கும். ஆனால் கையில் கொண்டு வந்த வேட்பாளரின் படம், இலக்கம், சின்னம் ஆகியவை அடங்கிய குட்டி ஸ்டிக்கர்களை கேட்டில் பரவலாக – தாராளமாக – ஒட்டித் தள்ளியிருக்கிறார்கள்.

வீடு திரும்பிய நண்பரின் மனைவி ஸ்டிக்கர்களை உரிக்க, புதிதாக அடித்த கேட் பெயிண்ட் அள்ளுப்பட்டு வந்து விட்டது. அலங்கோலமாகி விட்டது நண்பரின் அழகு கேட்.

நமது வாக்காளர் நண்பர் வெளிநாட்டில் இருந்து திருமண நிகழ்வுக்காக தனது மகள் வருவதை ஒட்டி வீட்டைப் பெயிண்ட் அடித்து தயார் செய்து வைத்திருந்தார்.

தமது பெயிண்ட் அடித்த கேட்டை நாசமாக்கியவருக்கு வாக்குப் போட முடியாது, போடக்கூடாது என்பது வாக்காளர் நண்பரின் மனைவியின் கட்டளை. அதை மீற முடியாமல் அவர் அல்லாடுகிறார்.

தமது வேட்பாளர் நண்பரிடம் உண்மையை அவர் கூறிவிட்டார். என் வீட்டில் இருந்து ஒரு வோட்டும் உனக்கு வராது என்பது அவரது ஒப்புதல் வாக்குமூலம்.

அந்தப் பிணக்கை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்திருக்கிறார்கள் இருவரும் தீர்வு தரும்படி கோரி.

நான் என்ன செய்ய முடியும்? வாக்காளர் நண்பரின் மனைவியின் சுடு சொல் எனக்குத் தெரியும். வாய் கொடுக்க நான் தயாராக இல்லை.

என்னிடம் தீர்வு இல்லை, இருவருமே உங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தேன்.

என் வேட்பாளர் நண்பருக்கு ஊருக்குள் அதிகம் வோட்டுகள் விழ வாய்ப்பில்லை. கிடைத்த வாய்ப்பையும் தான் சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்திருந்தவர்கள் மூலம், தான் பணம் செலவழித்து அச்சிட்ட ஸ்டிக்கரை பயன்படுத்தி நாசமாக்கி கொண்டார் அவர்.

இந்த அதிகப்பிரங்கித்தனங்களை என்ன என்று சொல்வது?

---

## நேரடி, மறைமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தற்காகவே தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நேற்று நள்ளிரவுடன் முடிவுறுத்தப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் இன்றும், நாளையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"நாடாளுமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. சகல வாக்களிப்பு மத்திய நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமைதியானதும், சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு ஒட்டுமொத்த மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் திங்கட்கிழமை (நேற்று) நள்ளிரவுடன் நிறைவடைகின்றன. வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

வாக்காளர்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் முடிவுறுத்தப்படுகின்றன.

வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

அத்துடன் 2024.10.26ஆம் திகதி சனிக்கிழமைநடைபெற்ற காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38(3(அ) ஆம் பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின் போது வாக்காளிப்பதை அடையாளப் படுத்துவதை அடையாள.ம் இடுவதில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடப்படும். வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறேதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும்." – என்றார்.

---

## தன்மானத்தைத் தமிழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரான சிவஞானம் சிறீதரனை ஆதரித்து நேற்று திங்கட்கிழமை மாலை கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இறுதிப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் அவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெறவுள்ள தேர்தல், மாற்றத்துக்கான தேர்தலாக அமைய வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், அந்த மாற்றம் எத்தகையதாக அமைய வேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

இடதுசாரிக் கொள்கைவாதிகளான ஜே.வி.பியினர் ஆட்சிப்பீடம் ஏறியிருப்பது மாற்றத்துக்காகவெனில், புதிய ஜனாதிபதி பதவியேற்ற இந்த ஆறு மாத காலத்தினுள் மாற்றத்துக்கான நகர்வுகள் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், புதிய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்திலும் எங்கள் மீதான ஆக்கிரமிப்பின் அகலக்கால்கள் விரிந்தே இருக்கின்றன.

தென்னிலங்கை மக்கள் விரும்புகின்ற மாற்றம் வேறு, வடக்கு – கிழக்கு மக்களுக்குத் தேவையான மாற்றம் வேறு. அத்தகைய மாற்றங்களின் இரண்டு புள்ளிகளும் இணைகின்ற இடத்தில் ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துக்கான களமும், அவர்களது ஆத்ம தாகமும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

எங்கள் மண்ணில், அடிப்படை உரிமைகளோடு எங்களை நாங்களே ஆளுகின்ற ஆட்சி முறையே எமக்கானதும் எமது மக்களுக்கானதுமான மாற்றமாக அமையும்.

தமிழீழத்தின் நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சியில் நின்றுகொண்டு, எனக்கு மீண்டுமோர் ஆணை தாருங்கள் என எனது மக்களிடம் நான் கேட்டு நிற்கின்றேன்.

இந்தத் தேர்தல் வெற்றிக்காக நீங்கள் எனக்கு அளிக்கவிருக்கும் 06

# அகில இலங்கை பரதநாட்டியப் போட்டி; வட. இந்து மகளிர் மாணவி முதலிடம்



தேசிய மட்டத்தில் இடம்பெற்ற அகில இலங்கை பரதநாட்டியப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

திருகோணமலை சண்முகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் தனிநடன போட்டியில் பங்கேற்ற செல்வி வைஷாலி கரன் முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கும், வடமராட்சி வலயத்திற்கும். வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்த மாணவிக்கு பரதக்கலை ஆசிரியை திருமதி கௌசிகா விஜேந்திரன் மற்றும் பாடலை கர்நாடக சங்கீத ஆசிரியை திருமதி பாக்கியா ராஜன் ஆகியோர் நெறியாள்கை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தன்மானத்தைத் தமிழ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்கின் வல்லமைதான், வழக்குகளின் கூடாரமாகியிருக்கும் தமிழரசுக் கட்சியை நீதிமன்றத்திலிருந்து மீட்டு, அதன் தலைமைத்துவத்தை நான் பொறுப்பேற்பதற்கான ஏதுநிலைகளை உருவாக்கும்." – என்றார்.

















# மொட்டுக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக கீதநாத் நியமனம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ள குறித்த நியமனத்தில் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான காசிலிங்கம் கீதநாத் 2024 நவம்பர் 11 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில், கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான பிரதான அமைப்பாளராக நியமிக்கப்படுகின்றார் எனவும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்காலத்தில் நடைபெறும் பரப்புரைகள், பொதுக்கூட்டங்கள், மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஊடகங்களுக்கான கருத்துகள் உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி சார்ந்த அனைத்து செயற்பாடுகளும் கீதநாத் காசிலிங்கத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கட்சியை எதிர்காலத்தில் வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நியமனம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் சேவைகளை இன்னும் வேகமாக முன்னெடுக்க உதவும் என நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இறுதி தேர்தல் பரப்புரை சுன்னாகத்தில்





ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளர்கள் பங்கேற்ற இறுதி தேர்தல் பரப்புரை கூட்டம் சுன்னாகம் பகுதியில் புளொட் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இத்தேர்தல் பரப்புரை கூட்டத்தில், த.சித்தார்த்தன், கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், சசிகலா ரவிராஜ் ஆகிய வேட்பாளர்களும் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் மூத சட்டத்தரணி என். சிறீகாந்தா ஆகியோர் பங்கேற்று உரை நிகழ்த்தி இருந்தனர். இதன் போது பா.கஜதீபன் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க பாராளுமன்றத்தில் பேசிய பேச்சுகள் மிக மிக அருமையான பேச்சுகள். ஆனால் எதிர்க்கட்சியாக இருந்தபோது பேசியவற்றுக்கு மாறாகவே ஜனாதிபதியாக செயற்பட்டு வருகின்றார். தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு நீண்டகாலமாக தீர்வுகாணப்படாத நிலை காணப்படுகின்ற நிலையில் பாதை விடுவிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை தேர்தல் ஆதாயத்திற்காக கையிலெடுத்து இரண்டாம்தர அரசியலை அனுரகுமார திசநாயக்க செய்துள்ளார். எங்களுடைய மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை மீள விடுவிப்பதையே சாதனையாக சொல்லி அரசியல் செய்கிறார்கள்.

நவம்பர் 14 ஆம் திகதி வட கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு திரண்டு சங்குச் சின்னத்துக்கு வாக்களித்து அமோக வெற்றிபெறச் செய்ய வேண்டும்.(100)


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது.”

- மார்ட்டி ன் லூதர்

(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைதிக் காலம்

நாளை மறுதினம் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பு. நேற்று நள்ளிரவு தொடங்கி நவம்பர் 14ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தல் நாள் வரை கட்டாய மௌனம் - அமைதிக் காலம் - கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில், பேரணிகள், விளம்பரப் பிரசுரங்கள் விநியோகம் மற்றும் வீடு வீடாகப் பிரசாரம் செய்தல் உள்ளிட்ட அனைத்துப் பரப்புரை நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகளை மீறும் எவரையும் கைது செய்யப் பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது. நேற்று நவம்பர் 11ஆம் திகதி நள்ளிரவில் பிரசாரம் உத்தியோகபூர்வமாக முடிவடைந்தது. வேட்பாளர்களுக்கான அனைத்துத் தேர்தல் அலுவலகங்களும் இன்று நவம்பர் 12ஆம் திகதி நள்ளிரவுக்குள் அகற்றப்பட வேண்டும் என்று இலங்கைத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அமைதிக் காலத்தை மீறி நடந்தால் சட்டரீதியான விளைவுகள் ஏற்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க, வேட்பாளர்களை எச்சரித்துள்ளார்.

"இந்த அமைதியான காலகட்டத்தில் பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அனைத்து வேட்பாளர்களையும் அவர்களின் ஆதரவாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திய தேர்தல்களில், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கூட இந்த நேரத்தில் - அமைதிக் காலத்தில் - பிரசாரத்தை தொடர்ந்தமையை நாம் நாம் பார்த்திருக்கிறோம். தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள், வழக்குத் தொடரப்பட்டால், தங்கள் பதவிகளை இழக்கும் அபாயம் உள்ளது" என்று ரத்நாயக்க கூறினார்.

தேர்தல் நாளுக்கு முன்னதாக நியாயமான மற்றும் பாரபட்சமற்ற சூழலை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு, இந்த அமைதிக் காலத்தின் போது தேர்தல் பிரசாரங்கள் விலக்கப்படுகின்றமையை உறுதிசெய்ய இலங்கை தேர்தல் ஆணையம் சமூக ஊடகத் தளங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படவுள்ளது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

இது விடயத்தில் முன்னைய தேர்தல்களில் இடம்பெற்ற முறைகேடுகளை நன்கு அவதானித்துள்ள தேர்தல் ஆணையம் இந்தத் தடவை தனது கண்காணிப்பு நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் தீவிரப்படுத்தி உள்ளது.

அமைதிக் காலத்தில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அநாமேதயமான முறையில் பிரசாரம் செய்யும் நடவடிக்கையை முறியடிப்பதற்கு தேர்தல் ஆணையம் தயார் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சைபர்குற்றவிசாரணைபிரிவினர்உட்பட இத்துறையில் கைதேர்ந்த - நிபுணத்துவம் மிக்க - பணியாளர்களை தேர்தல் ஆணையம் தன்னுடைய நடவடிக்கைகளுக்கு உதவியாக வைத்துக் கொண்டு அமைதிக்காலக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆகவே இந்த அமைதிக் காலத்தில் தந்திரோபாயமான முறையில் பிரசாரங்களை முன்னெடுக்க முயலும் வேட்பாளர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் மடக்குவதற்கு தேர்தல் ஆணையம் தயார் நிலையில் இருந்து வருகிறது.

தேர்தலுக்கு - வாக்களிப்புக்கு - முந்திய மௌன வேளை அல்லது அமைதிக்காலம் என்பது வாக்காளர்கள் அதுவரை முன்வைக்கப்பட்ட பிரசாரங்களையும்பரப்புரைகளையும்உள்வாங்கி, தாங்கள் ஒரு சுயமான தீர்மானத்திற்கு வருவதற்கு அவர்களுக்கு அளிக்கப்படும் கால அவகாசமாகும். இந்தச் சமயத்தில் குழப்பங்கள் ஏதும் இன்றி, புதிய தலையீடுகள் இல்லாமல், வாக்காளர்கள் விடயங்களை உள்வாங்கி முடிவு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இந்த வேளையில் புதிய பிரசாரத் தலையீடுகள், குழப்பங்களைத்தவிர்ப்பதற்காகஅமைதிவேணும்படி கோரப்படுகின்றது. அதனை வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.



# த.வெ.கவில் இணைந்தனர் நாகை நாம் தமிழர் கட்சியினர்

நாகை பகுதியைச் சார்ந்த நூற்றுக்கணக்கான நாம் தமிழர் கட்சியின் தொண்டர்கள் அக்கட்சியில் இருந்து விலகி த.வெ.கவில் இணைந்துள்ளனர்.

நாகையில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தோர் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணையும் நிகழ்வு தமிழக வெற்றிக் கழக நாகை மாவட்ட செயலாளர் சுகுமாறன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நாகை ஒன்றியத்துக்கு உட்பட்ட வடக்கு பொய்கை நல்லூர், தெற்கு பொய்கை நல்லூர், செல்லூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நாம் தமிழர் கட்சியினர் மற்றும் செல்லூரைச் சேர்ந்த தி.மு.கவை சேர்ந்தவர்கள் பலரும் அக்கட்சிகளில் இருந்து விலகி, தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

தமிழக வெற்றிக் கழகத்தில் புதிதாக இணைந்த முக்கிய பொறுப்பாளர்கள் மற்றும் இளைஞர்களை வரவேற்ற, நாகை மாவட்டச் செயலாளர் சுகுமாறன், அவர்களுக்கு சால்வை அணிவித்து அக்கட்சியில் இணைத்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக மாவட்ட பொறுப்பாளர்கள், நகர செயலாளர், வழக்கறிஞர் அணியினர், மகளிரணியினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# இ.பி.எஸ் உடன் நேருக்கு நேர் விவாதிக்க தயார்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு





அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் நேருக்கு நேர் விவாதிக்க தயார் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் ராணிப்பேட்டை மாவட்டத்தில் ‘மாவட்ட விளையாட்டு வளாகம்’ அமைத்திடவும், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ‘ஒலிம்பிக் அகாடமி’ தொடங்கவும் சென்னையில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் காணொலி வாயிலாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், யாருடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டன என்பது குறித்து நேருக்கு நேர் விவாதிக்க தயாரா? என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதல்வருக்கு கேள்வி எழுப்பியிருப்பது தொடர்பாக கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், “என்னை கூப்பிட்டால் நான் செல்வேன்.” என்றார்.

தொடர்ந்து பல திட்டங்களுக்கு கருணாநிதி பெயர் சூட்டப்படுவதாக எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டுவது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு, “வேறு யார் பெயரை வைக்கலாம்? விமர்சனம் வரத்தான் செய்யும். யார் பெயரை வைக்க வேண்டுமோ, அவர் பெயரைத்தான் வைக்க வேண்டும்.” என்று அவர் கூறினார்.





# முன் பிணை கோரி நடிகை கஸ்தூரி மனு: உயர் நீதிமன்ற கிளை இன்று விசாரணை

தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசினார் என தொடரப்பட்ட வழக்கில் நடிகை கஸ்தூரி முன் பிணை கோரி தாக்கல் செய்த மனு உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இன்று விசாரணைக்கு வருகிறது

சென்னை எழும்பூரில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய நடிகை கஸ்தூரி, தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக அவர் மீது மதுரை, சென்னை உள்பட பல இடங்களில் வழக்குப் பதிவு செயப்பட்டுள்ளது.

இந்த வாழக்குகளில் கஸ்தூரியை கைது செய்ய பொலிஸார் தேடி வருகின்றனர். இந்நிலையில் மதுரை திருநகரில் நாடார் மகாஜன சங்கம் அளித்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முன் பிணை கோரி நடிகை கஸ்தூரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில நேற்று மனு தாக்கல் செய்தார்.

அதில், "தெலுங்கு மக்கள் குறித்து பேசியதற்கு வருத்தம் தெரிவித்த பின்னரும் அரசியல் உள்நோக்கத்தோடு, என் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுகிறேன். ஆகவே, எனக்கு இந்த வழக்கில் முன் பிணை வழங்கி உத்தரவிட வேண்டும்." எனக் கூறியுள்ளார். இந்த மனு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக இன்று விசாரணைக்கு வர உள்ளது.

முன்னதாக, வழக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற அழைப்பாணையை வழங்க சென்னை போயஸ் கார்டனில் உள்ள கஸ்தூரி வீட்டுக்கு பொலிஸார் நேற்று சென்றனர். அப்போது அவரது வீடு பூட்டப்பட்டிருந்தது. இதனால் அவரது தொலைபேசி எண்ணை பொலிஸார் தொடர்பு கொண்டனர். அப்போது செல்போன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

இதனால் பொலிஸார் அழைப்பாணையை அவரது வீட்டுச் சுவரில் ஒட்டிவிட்டுச் சென்றனர். கைது நடவடிக்கையை தவிர்க்க நடிகை கஸ்தூரி தலைமறைவாகி விட்டார் என்று கூறப்பட்டது. மேலும் அவர் முன் பிணைக்கு முயற்சி செய்து வருகின்றார் என தகவல் வெளியான நிலையில் அவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் முன் பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

# பதவியேற்று ஆறு மாதங்களுக்குள் ஹெய்ட்டியின் பிரதமர் பதவி நீக்கம்




ஹெய்ட்டியின் பிரதமர் கேரி கோனில் பதவியேற்று ஆறு மாதங்களுக்குள் அந்தநாட்டின் ஆளும் கட்சியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் உயர் மட்ட பேரவையில் ஒன்பது உறுப்பினர்களில் எட்டு பேர் கையொப்பமிட்ட அறிவித்தலின் பிரகாரம், அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், ஹெய்ட்டியின் முன்னாள் செனட் வேட்பாளரான அலிக்ஸ் டிடியர் ஃபில்ஸ் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரியான கேரி கோனில், ஹெய்ட்டியில் இடம்பெறும் பாதுகாப்பு நெருக்கடியையடுத்து, அந்த நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும், தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என ஹெய்ட்டியின் பிரதமர் கேரி கோனில் தெரிவித்துள்ளார்.



# ட்ரம்ப் மீதான கொலை முயற்சி குற்றச்சாட்டை மறுக்கும் ஈரான்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய முற்பட்டதாக தங்களது தரப்பின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.

ஈரானின் புரட்சிகர இராணுவத்தினால் டொனால்ட் ட்ரம்பை கொலை செய்வதற்காக நியமிக்கப்பட்டதாகக் கூறப்படும் பர்ஹாத் ஷக்கேரி என்பவருக்கு எதிராக மன்ஹட்டன் பெடரல் நீதிமன்றில் அமெரிக்க நீதிச் சேவை திணைக்களம் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது.

அத்துடன், அந்த நபர், இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துப் பாரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார் என அந்த குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், டொனால்ட் ட்ரம்ப் மீதான கொலை முயற்சி தொடர்பில் ஈரானிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் இஸ்மாயின் பகேய் பதிலளித்துள்ளார்.

அதன்படி, அமெரிக்காவினால் ஈரான் மீது முன்வைக் கப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள அவர், அவை முற்றிலும் ஆதாரமற்றவை என்றும் விமர்சித்துள்ளார்.

இது அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் நோக்கில் ஈரானிய எதிர்ப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட சதி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த ஈரானின் புரட்சிகர இராணுவத்தினர், பர்ஹாத் ஷக்கேரியை நியமித்ததாக அமெரிக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் ஈரானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் எந்த கருத்துகளையும் தெரிவிக்கவில்லை.





# தமிழரசு மாபெரும் வெற்றி பெறும்!

## மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சாணக்கியன் நம்பிக்கை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் இரா.சாணக்கியனின் இறுதிப் பிரசாரக் கூட்டம் கல்லடிப் பாலத்துக்கு அருகாமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.



பெருமளவு மக்கள் பங்கேற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்தில் வேட்பாளர் இரா.சாணக்கியம் உரையாற்றும்போது, “மட்டக்களப்பு மாநகரில் இறுதிப் பிரசாரக் கூட்டம் சிறப்பான முறையில் முடிவுற்றது. இம்முறை தமிழரசுக் கட்சியானது பாரியளவு வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றி பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.” – என்றார்.

















# சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பதில் மக்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள்

## த.சித்தார்த்தன் தெரிவிப்பு




"வடக்கு கிழக்கு மாகாணங்களில் கணிசமான மக்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடனும் சங்கு சின்னத் துக்கு வாக்களிப்பதிலும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள்."

– இவ்வாறு முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரி வித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாற்றத்தை பற்றி பலர் சொல்கின்ற னர். அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெற்றதை வைத்து இதனை பலர் கூறு கின்றனர். மாக்ஸிஸ லெனினிச கொள் கைகளை பேசும் ஒருவர் ஆட்சியில் ஏறி யமை மாற்றம் தான். ஆனால். தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை இருக் கிறது. அதிகார பரவலாக்கம் தேவை என்ற விடயங்களை அநுரகுமார திஸ நாயக்க தரப்பு ஏற்பதாக தெரியவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக் கப்பட வேண்டும் என வலியுறுத்திய அநுரகுமார திஸநாயக்க தற்போது அதை திருத்தி பயன்படுத்தலாம் என தற்போது சொல்கின்றனர்.

தமிழ் மக்கள் இம்முறை சிந்தித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை பலப்படுத்த வேண்டும். சங்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 2,3 ஆசனங்கள் கிடைக்கும்." – என்றார்.

# அனைத்து மக்களையும் இணைத்து பலமான அணியாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி காணப்படுகின்றது

## வேட்பாளர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவிப்பு




"வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை மக்களை ஒன்று சேர்க்கும் பலமான அணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி காணப்படுகின்றது."

– இவ்வாறு அக்கட்சியின் வேட்பா ளர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரி வித்தார்.

யாழ், ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இம்முறை நாடாளுமன்றத் தேர்த லில் தென்னிலங்கையில் அநுர தரப்பு 113 ஆசனங்களை பெறும் என்று நம்புகிறோம். கோட்டாபயவை விட கடுமையான நிலைப்பாடு கொண்ட வராக அநுரகுமார திஸாநாயக்க உள்ளார். இந்நிலையில் அதனை எதிர்கொள்ள பலமான அணி யொன்றுவடக்குகிழக்கில்இருந்துசெல்ல வேண்டும்.வடக்கு கிழக்கிலே பெரும் பான்மை மக்களை ஒன்று சேர்க்கும் பலமான அணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி காணப்படுகின்றது. ஏனையவர்களை ஒன்றிணைத்து களமிறங்க நாம் திட்டமிட்டோம். அது சாத்தியப்படவில்லை.

திருகோணமலை மற்றும் அம் பாறை மாவட்டங்களில் தமிழ் பிரதி நிதித்துவம் பெறுவதை உறுதிப்படுத்த சேர்ந்து போட்டியிட முயற்சித்தோம். ஆனால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதனை விரும்பவில்லை. ஒன்றுபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்த தால் தான் இலங்கை தமிழ் அரசுக் கட்சி யும் அவ்வாறு உடைகிறது. விக்னேஸ் வரனின் கட்சி யாழ்ப்பாணத்தில் மட்டும் போட்டியிடுகிறார்கள். வடக்கு கிழக்கு எங்கும் கிளைகள் இல்லை.

சில சுயேட்சைகள் ஆயிரம் வாக்கு களை பெறும் என்கிறார்கள். ஆனால் எனக்குள்ள கவலை அது பயனில்லா மல் போகப்போகிறதே என்பது தான்." – என்றார்.

# நாம் வடக்கு கிழக்கில் செய்த விடயங்களை ஒரு தரப்பு தாம் செய்தவை என மார்தட்டியது

## பொதுஜன பெரமுன வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவிப்பு

“இதுவரை நாம் வடக்கு கிழக்கில் செய்த விடயங்களை ஒரு தரப்பு தாம் செய்தோம் என மார்தட்டியது. மற்றொரு தரப்பு தமிழ் தேசியத்தை வைத்து பிளவுபடுத்துகிறது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்தார்

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,




“எமது கட்சி மொட்டு சின்னத்தில் முதல் முறையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் களமிறங்கியுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணம் கண்டிராத அபரீத வளர்ச்சியை எமது கட்சியே செய்தது. இங்குள்ள சிலர் அரசாங்கத்திடம் வற்புறுத்தி பெற்றதாக கூறுகின்றனர். ஆனால் எமது கட்சி தலைவரிடம் வற்புறுத்தி வாங்க முடியாது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக எங்களை வெற்றிபெற வைக்கவில்லை. எமக்கு எதிராக செய்யப்பட்ட பிரசாரத்திற்கு நாம் பதில் சொல்லவில்லை. தேர்தல் முடிந்தவுடன் ஓடமாட்டோம். யாழ் மாவட்டத்திலும் நாடாளவிய ரீதியிலும் நாம் பின்தங்க உள்ளோம் என்ற உண்மையான சொல்ல வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் சகல விடயங்களுக்கும் நிச்சயம் பதில் வழங்குவோம். எதிர்வரும் காலங்களில் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணம் வருகை தருவார். மொட்டுக்கான மறுமலரச்சியாக இனிவரும் காலம் அமையும்.

தேசிய மக்கள் சக்தி தெற்கில் இருந்து மக்களை கூட்டி கூட்டம் நடத்தினர். இவர்கள் ஊழல் பைல் என கண்காட்சி நடத்தினர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை, 13 தொடர்பாக எதுவும் செய்யவில்லை. எமது அரசாங்கத்தில் 13000 அரசியல் கைதிகளை விடுதலை செய்து வேலை வாய்ப்பு, மோட்டார் சைக்கிள்கள் என பலதை வழங்கினோம். நாம் செய்ததை சொல்லி காட்டவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தி சொன்னதை செய்யவில்லை.

தெற்கில் ஒரு கதை. வடக்கில் ஒரு கதை என தேசிய மக்கள் சக்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி சொல்கிறார் எப்போது விடுவிப்பார் என்பதை சொல்ல வேண்டும். எங்கள் கட்சியை எதிரியாக தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். ஆனால் மக்களுக்கு நல்லவராக வேடம் போட்டு தேசிய மக்கள் சக்தி மக்களை முட்டாளாக்குகிறார்கள்.

தெற்கு மக்கள் தேசிய மக்கள் சக்தியை நம்புகின்றனர். வடக்கு மக்கள் நம்ப மாட்டார்கள். கேள்வி கேட்பார்கள். வாக்குகளை இழப்போம் என தெரிந்தும் நாமல் ராஜபக் ஷ 13 பற்றி இது தான் எமது நிலைப்பாடு என தெளிவாக சொன்னார். ஜே.வி.பி. 13 தொடர்பாக தமது நிலைப்பாட்டை சொல்வார்களா?

இதுவரை நாம் செய்ததை ஒரு தரப்பு தாம் செய்தோம் என மார்தட்டியது. ஒரு தரப்பு தமிழ் தேசியத்தை வைத்து பிளவுபடுத்துகிறது. மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்று விற்பனை செய்துவிட்டு நவம்பர் மாதம் மாவீரர் நாளுக்கு அஞ்சலிக்க வந்திருப்பர். மாவீரர் நாளுக்கு எந்த இடத்திலும் நாம் இடையூறு விளைவிக்கமாட்டோம். இதனை கட்சி மட்டத்தில் நாம் வலியுறுத்துவோம். அரசியல்வாதிகள் வந்தால் அடித்து துரத்துங்கள். மக்கள் உயிரிழந்த உறவுகளை நினைவுருவதற்கு உரிமை உண்டு” – என்றார்.

# எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மாற்றத்துக்கான களமாக உள்ளது

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் கௌரி விவரிப்பு

பழைய அரசியல்வாதிகள் சரியான தீர்வை வழங்காதம்சியாக் மாற்றத்தை மக்கள் விரும்புகின்றனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்மா ற்றத்துக் கான களமாக உள்ளது

என தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் கௌரி தெரிவித்தார்.




யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலுக்கான பணச் செலவீட்டை பார்த்தாலே இந்த மாற்றத்தைப் பார்க்கலாம். எமது கட்சியில் நான் தனிப்பட்ட ரீதியில் மிகவும் குறைவான தொகையையே செலவிட்டேன். பலரும் கோடிக்கணக்கில் தேர்தலுக்கு செலவு செய்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் வென்ற 22 பேரே இன்று 22 தரப்பாக பிளவடைந்துள்ளனர். போனஸ் ஆசனம் தவிர ஐந்து கட்சிகளுக்கு ஐந்து ஆசனம் செல்லும் நிலையே காணப்படுகிறது.

தேசியம் பற்றி மட்டுமே கதைப்பவர்கள். பெ ண்கள் மற்றும் பொருளாதாரம் குறித்து யாரும் பேசுவதில்லை. பெண் பிரதிநிதி வேண்டும் என்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 4 ஆம் இலக்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் – என்றார்.

# தமிழரசில் வேட்பாளர் நியமனம் கிடைக்காததால் சிலர் மாம்பழத்தைத் தூக்கி நடனமாடுகின்றனர்!

## சுமந்திரன் விவரிக்கின்றார்




எங்கள் கட்சியில் வேட்பாளர் நியமனம் கேட்டு கிடைக்கவில்லை என்பதற்காகச் சிலர் மாம்பழத்தைத் தூக்கி நடனமாடுகின்றனர்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐம்பது பஸ்ஸில் அநுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணம் வந்து கூட்டம் நடத்தினார். சிங்களத்தில் பேசியது அங்கிருந்தவர்களுக்கு விளங்கியிருக்கும்.

ஜனாதிபதி அநுர தம் பஸ்ஸில் ஏற்றமாட்டோம் எனச் சொன்னார். தூர இடங்களுக்குச் செல்லும் அந்த பஸ்ஸில் ஏறமாட்டோம்.

இந்த தேர்தலின் போது அமைச்சுப் பதவி பற்றி ஒவ்வொருவரும் தங்களுக்குள் பேசுகிறார்கள்.

ஜனாதிபதி எனக்கு வெளிவிவகார அமைச்சர் தரப்போகிறார் என உதய கம்மன்பில சொன்னார்.

2019 ஆண்டு அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் பே-ாட்டியிட்டார். 2022 நாடாளுமன்றில் நடந்த ஜனாதிபதி தெரிவில் 3 வாக்குகளை அநுர குமார திஸநாயக்க பெற்றார்.

அதன் பின்னர் அநுர உரையாற்றிய போது சுமந்திரன் பிரதமராக இருக்க வேண்டும் எனக் கூறினார். இதனை ஹன்சாட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்.

எங்கள் கட்சியில் வேட்பாளர் நியமனம் கேட்டுகொ கிடைக்கவில்லை என்பதற்காக சிலர் மாம்பழத்தைத் தூக்கி நடனமாடுகின்றார்.

96 ஆம் ஆண்டு நீதிமன்றமொன்றின் தீர்ப்பில் தவராஜா யார் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. தவராஜா ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாக சபை உறுப்பினர். தவராஜா தற்போது மானஸ்தர் போல கதைக்கிறார்.

எமது கட்சியில் யாராவது மதுபான சாலைக்குச் சிபாரிசு செய்தமை தெரிய வந்தால் அவர்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

ஜனாதிபதியாக உள்ளவரின் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை எடுக்கும்

வழக்கத்ததின்படி தேசிய மக்கள் சக்திக்கு சாதாரண பெரும்பான்மை கிடைக்கலாம். யாழில் நடந்த கூட்டத்தில் தமிழ் தேசியப் பிரச்சினை இந்நாட்டில் இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மூச்சும் விடவில்லை.

தமிழ் மக்கள் மாற்றம் என்ற அலையில் மாண்டுபோகக் கூடாது. மாற்றம் என்பது தடுமாற்றமாகி உள்ளதாக பத்திரிகை ஒன்று ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஊழல்வாதிகள் அல்லர். ஆனால் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வில் மௌனம் காக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓர் ஆசனம் கிடைத்தாலும் அது தமிழ் மக்களுக்கு பாரிய பின்னடைவு. தமிழ் தேசிய அடையாளம், நீண்டகாலப் போராட்டம், எத்தனையோ உயிர்களை கொடுத்திருக்கிறோம் என்பதற்குப் பலனில்லை.

வடக்கு,கிழக்கு இணைந்த தாயகத்தை காப்பாற்றுவது இலங்கை தமிழ் அரசுக் கட்சிதான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திற்கு தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல்போன போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறைக்கு வழங்கியது. சைக்கிள் கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் ஆசனம் யாழ்ப்பாணத்திற்கே வழங்கப்பட்டது.

அந்த கட்சிக்கு கிழக்கு மாகாணம் பற்றி கவலையில்லை - என்றார்.

# தமிழ் அரசுக் கட்சி பிரிந்து செயலிழந்துவிட்டது

## கே.வி.தவராசா தெரிவிப்பு




"இலங்கை தமிழ் அரசுக் கட்சி பிரிந்து பிரிந்து செயலிழந்து விட்டது. இந்நிலையில், தற்போது அக்கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்களித்தால் சுமந்திரனே தெரிவாகுவார்."

- இவ்வாறு மாம்பழம் சின்ன சுயேட்சை குழு முதன்மை வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை தமிழ் அரசுக் கட்சி பிரிந்து பிரிந்து செயலிழந்து விட்டது. சுமந்திரன் கட்சியின் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்ட பின்னர் கஜேந்திரகுமார், சிவகரன், சிற்றம்பலம் ,அருந்தவபாலன், அனந்தி, விக்னேஸ்வரன் என பலரும் வெளியேறினர்.

நான் 14 ஆண்டுகளுக்கு மேலாக கட்சி தமிழ் தேசியத்துக்கு அப்பால் செல்ல வேண்டாம் என்பதற்காக முயற்சித்தேன்.

தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக தலைவரால் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிட முடிவெடுத்தது. கூட்டமைப்பு தனி மனித செயற்பாடு அல்ல. கட்சி தனிநபரின் கம்பனியாகி விட்டது. தமிழ் தேசியத்துக்கு யாராவது பாடுபட்டால் அவர்கள் வெளியேற்றப்படுவர்.

மக்களுடைய தமிழ் தேசியத்தை மூலதனமாக்கி விட்டு தமது பொருளாதாரத்தை பார்க்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கட்சிக்கு வந்த நிதி பற்றி கேள்வியெழுப்பிய விமலேஸ்வரி கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பதவியும் பணமும் இந்த கட்சியை இந்நிலைக்கு கொண்டுவந்தது.

ஏன் விலகினீர்கள் என பலரும் கேட்கின்றனர். அழியப்போகும் கட்சியில் தொடர்ந்து இருக்க முடியாது. அது வரலாற்றுத் தவறு.

மாவை சேனாதிராஜாவும் சிறீதரனும் செயலிழந்துவிட்டனர். கட்சியில் நான் காணாதவர்கள் தற்போது வேட்பாளர்களாக உள்ளனர். தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்தால் சுமந்திரனே தெரிவாகுவார்.

மாற்றம் வரவேண்டும் என்பதற்காக மாற்றானுக்கு வாக்களிக்க முடியாது. அனைவரும் தமிழ் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். அந்த வகையில் எமது மாம்பழம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்." - என்றார்.

# மதுச்சாலை உரிமம் பெற பரிந்துரைத்தேனா? திராணி இருந்தால் நிரூபித்துக் காட்டுங்கள்!

## சவால் விடுகின்றார் சிவஞானம் சிறிதரன்




எனக்கு மதுபான சாலை உள்ளது அல்லது நான் யாருக்கும் மதுபான சாலைக்கு சிபாரிசு செய்தேன் என்பதை மதுவரி திணைக்களம், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட தரப்புக்கள் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தினால் எனக்குக் கிட்டக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வேன். இது பற்றி பேசுபவர்களுக்கு திராணி இருந்தால் – தில் இருந்தால் – கெத்து இருந்தால் – அதை நிரூபித்துக் காட்டுங்கள். நான் தயாராக இருக்கிறேன் என முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சவால் விடுத்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என் மீதான மதுபான சாலை பரிந்துரைக் குற்றச்சாட்டு விவகாரச் சர்ச்சை உள் கட்சியினராலேயே முதலில் எழுந்தது. அது வெளிக் கட்சியால் செய்யப்படவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளரை நான் ஆதரிக்க எடுத்த முடிவு காரணமாக அது உள் கட்சியினரால் செய்யப்பட்டது.

அதுக்காக சுமந்திரன் இம்முறை சிறீதரன் தேர்தலில் போட்டியிடக்கூடாது எனக் கட்சியில் வாதிட்டார். ஊடகங்களுக்கும் சொன்னார். என்னை (வேட்பாளர் நியமனம்) கேட்கக் கூடாது என என்னிடமும் தெரிவித்தார். அதனை நீங்கள் தீர்மானிக்க முடியாது, அதை கட்சியின் மத்திய குழுவே தீர்மானிக்கும் என்றேன்.

கிளிநொச்சியில் மதுபானசாலைகள் அதிகரித்துள்ளன. அந்தப் பக்கமும் உள்ளது. இந்தப் பக்கமும் உள்ளது என இதே இடத்தில் இருந்து முன்னாள் எம்.பி. ஒருவர் கருத்துத் தெரிவித்தார். மதுபான சாலைகள் திறக்கும் போது அவரும் எம்.பியாகத்தான் இருந்தார். அவர் அதனை தடுத்திருக்கலாமே? கிளிநொச்சிக்கு அவரும் எம்.பிதானே? வாக்கு கோருவதற்கு கிளிநொச்சிக்கு வந்து பிரசாரம் செய்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கிறார்கள் தானே. அந்த நேரம் நீங்கள் ஏன் கேட்டுத் தடுக்கவில்லை? அடுத்தவன் மீது சேறு பூச வேண்டாம். மதுபான சாலை அனுமதிப்பத்திரம் வழங்கி திறக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அங்கிருக்கும் ஒருவர் தான் பார்க்கவில்லை எனக் குற்றஞ்சாட்டுவது அழகல்ல. நீங்களும் தானே இருந்தீர்கள். நீங்கள் என்ன செய்தீர்கள்? எடுத்த நடவடிக்கைகள் என்ன? நீங்கள் செய்த வழக்கு என்ன? முழங்காவில் மதுபான சாலைக்கு எதிரான வழக்கும் நாம் சொல்லியே போடப்பட்டது. அதனை விட நான் ஜனாதிபதிக்கும் ஆளுநருக்கும் கடிதம் எழுதியுள்ளோம். தேர்தலுக்கு பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்போம்.

எனக்கு மதுபான சாலை இல்லை என்பதை சத்தியக்கடதாசி மூலம் வெளிப்படுத்தத் தயார். யாராவது எனக்கு மதுபான சாலை உள்ளது அல்லது நான் யாருக்கும் மதுபான சாலைக்கு சிபாரிசு செய்தேன் என்பதை உறுதிப்படுத்துங்கள். மதுவரி திணைக்களம், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட தரப்புக்களின் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தினால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வேன். இது பற்றி பேசுபவர்களுக்கு திராணி இருந்தால் – தில் இருந்தால் – கெத்து இருந்தால் – செய்து காட்டுங்கள். நான் தயாராக இருக்கிறேன்.

இந்த தேர்தல் தமிழ் மக்களை பொறுத்தவரை பெரும் நெருக்குவாரமிக்கதாக உள்ளது.

எது, எப்படியாயினும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை சிதையாது இருக்க வேண்டுமானால் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். கொழும்பு உள்ளிட்ட வெளியிடங்களில் இருப்பவர்கள் வாக்களிப்பு தினத்தன்று சொந்த இடங்களுக்கு சென்று வாக்களிக்க வேண்டும்.

உள்ளக பிரச்சினை, வெளியகப் பிரச்சினை என ஆயிரம் இருந்தாலும் தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிப்பதும் காப்பாற்றுவதும் தமிழரது கடமை.

சென்ற முறை தமிழ் தேசிய கூட்டமைப்பாக யாழில் போட்டியிட்ட போது 3 ஆசனங்களை பெற்றோம். இம்முறையும் மூன்றுக்கு மேற்பட்ட ஆசனங்களை யாழில் பெறுவோம் – என்றார்.

# ஜனாதிபதி அநுரகுமாரவை காட்டி யாழில் கூட்டத்தைக் கூட்டும் தேவை எனக்கு இல்லை

## அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு




ஜனாதிபதி அநுரவை காட்டி யாழில் கூட்டம் கூட்டும் தேவை எனக்கு இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வருகிறார் என சொல்லி கூட்டம் சேர்த்ததாக அக்கட்சியின் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். அவர் இந்த ஊரை சேர்ந்தவர் இல்லையே. இதனால் தான் அவருக்கு எம்மைப் பற்றி தெரியவில்லை.

குறித்த விடயம் தொடர்பில் எமது தரப்பால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரவை காட்டி கூட்டம் கூட்டும் தேவை எனக்கு இல்லை. இதற்கு முன்னரும் நான் பல கூட்டங்களை நடத்தியுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அநுரகுமார திஸாநாயக்கவின் கூட்டத்துக்கு பணம் கொடுத்து ஆட்களை கூட்டி வந்துள்ளார்கள். இதற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்க முடியும். இது தான் அவர்கள் முதல் கூட்டம். தானாக வந்ததே எமது கூட்டம்

யாழ்ப்பாணத்தில் இருந்து இவ்வளவு காலமும் சந்திரசேகரம் ஐயா என்ன வேலை செய்தார் என்பதை காட்ட முடியுமா? இங்குள்ள மக்களின் வாக்குகளை சூறையாட மறுபடியும் தேசிய மக்கள் சக்தி பொய் சொல்கிறது." – என்றார்.

# தமிழ்த் தேசிய நீக்கத்தை செய்வதற்காக முயற்சிகள்

## தமிழரசின் வேட்பாளர் சயந்தன் சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 12

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள "மாற்றம்" என்ற புள்ளியில் நின்று கொண்டு, தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்வதற்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் சட்டத்தரணியுமான சயந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களுக்கு இந்தத் தேர்தல் மிக முக்கியமானது. தமிழர்கள் நீண்டகாலமாகத் தாங்கள் தங்கள் அபிலாஷையா வலியுறுத்திவரும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் ஓர் இனம். ஆனால், தெற்கில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் என்ற ஒற்றைப் போர்வைக்குள் நின்றுகொண்டு எங்களுக்குச் சம உரிமை இருப்பதாகவும் எங்களுக்குப் பிரச்சினைகள் இல்லையென்றும் காண்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால்தான் இந்தத் தேர்தலில் தமிழர்கள் மிகவும் கவனமாக தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த ஒற்றைப் போர்வைக்குள் மூடப்பட்டுவிட்டால், எங்களின் தனித்துவம், எங்களின் அடையாளம் மற்றும் எங்களின் தாயகம் என அனைத்துமே மறைந்து போய்விடும். தமிழர்களின் வேணவாவாக சுயநிர்ணய உரிமையே இன்று இருக்கின்றது. அந்த வகையில் எங்களுக்கு உண்மையாகக் கிடைக்க வேண்டியது எங்களிடம் இருந்து பிடுங்கப்பட்ட இறைமை. அந்த இறைமைக்காகவும் இனத்தின் இருப்புக்காகவுமே நாம் போராடுகின்றோம். எனவே, தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டியது இன்று காலத் தேவை. அதைச் செயற்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களிடம் உண்டு - என்றார்.

# தற்போதைய அரசுக்கு வாக்களித்து விட்டு ஆறு மாதங்களின் பின்னர் யோசிப்பீர்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு




"தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பை கொடுத்துப் பார்த்தால் என்ன என்று சிலர் கருதுகின்றனர். இப்போதுள்ள அரச தரப்புக்கு வாக்களித்து விட்டு ஆறு மாதங்களின் பின்னர் யோசிப்பீர்கள். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கப் போவதில்லை."

- இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்திற்கு வந்த ஜனாதிபதி சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரும் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது கட்சி அரசாங்கத்தை அமைத்தால் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம் உள்ளிட்ட பல விடயங்களை செய்வதாக தெரிவித்தார். ஆனால் அநுரகுமார திஸநாயக்க தற்போது ஆட்சிக்கு வந்ததும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் மாறான கருத்துக்களை தெரிவிக்கிறார்.

ஜே.வி.பி. இராணுவத்துடன் பேசியே தமிழ் மக்களின் காணி விடுவிக்கும் என்றால் அது சாத்தியப்படாது. ராஜபக்ஷ காலத்திலும் இதே நிலைதான் காணப்பட்டது.

சோசலிச வழி வந்த அநுரகுமார திஸநாயக்க இவ்வாறு சொன்னால் காணி விடுவிப்பு என்பது குதிரைக் கொம்பு தான்.

அவ்வாறு தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பை கொடுத்துப் பார்த்தால் என்ன என்று சிலர் கருதுகின்றனர். இப்போதுள்ள அரச தரப்புக்கு வாக்களித்து விட்டு ஆறு மாதங்களின் பின்னர் யோசிப்பீர்கள். ஆகவே ஆறு மாதங்கள் வரை காத்திருங்கள். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கப் போவதில்லை.

தமிழ் மக்கள் தம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள். ஆகவே இனி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்றால் தமிழ் மக்கள் தமது பிரச்சினையை கையாள்வதில் நெருக்கடி ஏற்படும்.

ஊழல் இலஞ்சத்துக்கு ஒழிப்புக்கு மட்டும் ஆதரவளிக்கலாம். ஆனால் சிஸ்டம் சேஞ் என்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நிலை இருக்கிறதா?

ஜே.வி.பிக்கு அதிக ஆசனம் கிடைத்தால் நாடு சீரழியும் என ஜே.வி.பி. ஸ்தாபகர் ரோஹன விஜேவீர மகனே சொல்கிறார்.

தேசிய மக்கள் சக்தி 113 ஆசனங்களை பெறுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவ்வாறு கிடைக்காதுவிட்டால் நெருக்கடி ஏற்படும். இது சந்திரிகா குமாரதுங்க காலத்தில் நிகழ்ந்தது. ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் நாடாளுமன்ற பெரும்பான்மை மற்றொரு கட்சியாகவும் கிடைத்தால் நிலைமை மோசமாகும்.

தமிழர் தரப்பு சரியான ஒரு வலுவான கொள்கை கொண்ட தரப்பை ஆதரிக்க வேண்டும். தமிழ் தேசிய பிரச்சினையை கையாளக்கூடியவர்களை தவிர்த்தால் நிலைமைகள் மோசமாகும்.

இளைஞர்கள், யுவதிகள் அதீத கற்பனையில் மிதக்காமல் இந்த கால கட்டத்தில் யார் நாடாளுமன்றம் சென்றால் சிறந்தது என்பதை பார்த்து தெரிவு செய்ய வேண்டும்." - என்றார்.

# அதிகூடிய நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றால் ஏனைய உறுப்பினர்களையும் கூட்டாக்குவோம்

## விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவிப்பு




அதிகூடிய நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றால் நாங்கள் ஏனைய நாடாளுமன்ற பிரதிநிதிகளைக் கூட்டாக்குவதில் எமது செயற்பாட்டை நாங்கள் முன்நகர்த்துவோம் என விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்திலே நேற்று ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவக்கையில்,

"தமிழ் மக்கள் ஒரு மாற்றத்தை வேண்டி நிக்கின்றனர், அந்த மாற்றத்தை எமக்கு வாக்களிப்பதை விட வேறு எந்தத் தரப்புக்கு வாக்களித்தாலும் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

தமிழ் மக்கள் ஒரு தேசமாக வடக்கு கிழக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம், எமது சியநிர்ணய உரிமை தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு தான் எமது தீர்வாக இருக்கும் என்பது அசைக்க முடியாது நம்பிக்கை. 13வது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் தீர்வாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை, ஆனால் 13வது திருத்தச் சட்டச் அரசியலமைப்பிலே இருப்பதன் காரணமாக அதில் சொல்லப்பட்ட விடயங்கள் அமுல்ப்படத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. தள்மா நேரம் காண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

ஆனால் அது தமிழ் மக்களின் தீர்வல்ல, அது பற்றி நாம் மிகத் தெளிவாக இருக்கிறோம், அதனை யாரும் எமக்கு திணிக்கவோ அல்லது ஏமாற்றவோ முடியாது என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கிறோம்.

ஒற்றையாட்சிக்குட்பட்டு எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களின் இனப்பரசினைக்கு தீர்வாக அமையப்போவதில்லை. எமது தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஸ்ரிப் பொறிமுறையைத் தான் நாம் எமது தீர்வாக முன்வைக்கிறோம்.

இரு தேசம் ஒரு நாடு என்பதில் இருந்து நாம் வெளியேறவில்லை, அதிலிருந்து நாம் வெளியேறினோம் என்று கூறுவது தவறான விடயம். இரு தேசம் என்பது பற்றி நாம் கூறிவந்த விடயம் இலங்கையில் இரு தேசம் மாத்திரம் தான் உள்ளது என்று.

இலங்கையில் இரு தேசம் இருக்கிறதா அல்லது மூன்று தேசங்கள் இருக்கிறதா என்பது வேறு விடயம். எம்மைப் பொறுத்த வரை தமிழ் மக்கள் ஒரு தேசம் அது அங்கீகரிக்கப்பட வேண்டும் அதில் எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் இடம் கிடையாது.

இங்கு பல தேசங்கள் இருக்குமாக இருந்தால் அதை நாங்கள் அங்கீகரிக்கத் தயாராகவே உள்ளோம். குறிப்பாக மலையக மக்கள் தாங்களும் ஒரு தேசம் என்று வேண்டுவார்களாக இருந்தால் மூன்று தேசங்களாக அங்கீகரிக்கப்படலாம், அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இலங்கையில் எத்தனை தேசங்கள் இருக்கிறது என்பது விவாதம் அல்ல, தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த தேசமாக வாழ்ந்து வருகிறார்கள் அத் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும், அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது.

எதிர் வரும் தேர்தல் முடிவுகளின் பின் பலரும் எம்மைக் கேட்கும் கேள்வி அமைச்சரவையில் நாம் அமைச்சுப் பதவிகளை எடுப்போமா என்று? ஜே.வி. பினரின் நிலைப்பாடு மிகத் தெளிவானது, தமது கட்சியினருக்கு மாத்திரம் தான் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படுமென்பது. இந்தக் கேள்விக்கே இங்கு இடமில்லை ஆனால் நாடாளுமன்றத்திலே தமிழ் மக்களுக்குச் சார்பான தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்ற பொழுது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றும் உகந்த தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்ற பொழுது அல்லது தமிழ் மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப்படுகின்ற தீர்மானங்கள் முன்வைக்கப்படிகின்ற பொழுது அதற்கு முழுமையான ஆதரவை நாங்கள் வழங்குவோம். தமிழ் மக்களுக்கு எதிரான விடயங்கள் அவர்களாளே நகர்த்தப்படுமாக இருந்தால் அதற்கு எதிரான கடுமையான எதிர்ப்பை நாங்கள் வெளியிடுவோம்." என்றார்.

# லொஹான் ரத்வத்தேயின் பிணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானம்



மிரிஹானயில் வீடொன்றில் இருந்து பதிவு செய்யப்படாத வாகனம் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் பீ ஷஷீ மஹேந்திரன் ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பில் விடயங்களை முன்வைக்குமாறு குறிப்பிட்டு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு மனுதாரர் தரப்பினருக்கு நீதிபதிகள் குழாம் அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.11.2024



## மேஷம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## ரிஷபம்

இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.



## மிதுனம்

உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடா-மல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.



## கடகம்

நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்து கொள்ளுங்கள்.



## சிம்மம்

உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.



## கன்னி

முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.



## துலாம்

உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.

பதட்டத்தை தள்ளி வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.



## விருச்சிகம்

இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.11.2024




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யம் அளவிற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள்பணியில்மகிழ்ச்சியும்திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். என்றாலும் பதட்டத்தை தவிர்க்க வேண்டும்.




இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும்.உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும். எனவே கவலை வேண்டாம்.




